திரு. வை. பாலசுந்தரம் : குடிதண்ணீர்ப் பிரச்சினை எல்லாக் கிராமங்களுக்கும் பொருந்தியிருக்கும் காரணத்தால் மின்னொளி வழங்குவதில் க்ராஷ் ப்ரோக்ராம் வைத்துச் செயல்பட்டதுபோல் குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை இப்போது தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ 90 நகராட்சி மன்றங்களில் இன்னும் பத்து நகராட்சி மன்றங்கள்தான் பாக்கி இருக்கின்றன என்று சொல்லும் அளவுக்கு நம்முடைய தீவிரமான குடிநீர்த் திட்டத்தின் மூலம் பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் மின்னொளியை எப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் வழங்க வேண்டுமென்று திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவேற்றினோமோ அதைப் போல் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை எல்லாக் கிராமங்களுக்கும் வழங்க தீவிரமான திட்டம் செயல்பட்டு எந்த ஆண்டுக்குள் இந்தத் திட்டம் முடிவடைய வேண்டுமென்று அறிவித்து அரசின் சார்பில் கூறப் படும்.

Technical Examinations.

***63. Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state.**

(*a*) whether the system of special permission given to Commercial Institutes to present candidates for examination has been given up by he Director of Technical Education from 1972 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தட்டச்சுத் தேர்வில் இதுவரையில் பயிற்சிக்கூட மாணவர்களுக்குய கொடுத்து வந்த சலுகையான, கல்வித் தகுதி, நிபந்தனை முதலி) வைகள் நேரிடை மாணவர்களுக்கும் (**Private Candidates** அளிக்கப்பட்டுள்ளன.

மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்கள்.

* 64 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்குத் திருமணத்திற்காக வழங்கப்படும்கடன் தொகையைப்போல எய்டட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறதா ?